**களனி கங்கைக்கு மேலாக புதிய பாலத்தை நிர்மாணித்தல் செயற்திட்டம் - 2015**

களனி கங்கைக்கு மேலாக புதிய பாலத்தை நிர்மாணித்தல் செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் (ஜேஐசீஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 மார்ச் 28 ஆம் திகதிய எஸ்எல்பி-III ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 01 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் முகவராக உள்ளது. அதிகமாக இலகுவில் நகரும் இணைப்பொன்றாக களனி கங்கைக்கு குறுக்காக புதிய பாலத்தை நிர்மாணிப்பதன் மூலம் போக்குவரத்து நெரிசலை குறைத்தல் மற்றும் கலைத்தல், அதன் மூலம் கொழும்பு நகரில் போக்குவரத்து வலையமைப்பை முன்னேற்றுவதற்கு பங்களிப்புச் செய்தல் மற்றும் பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவித்தல் செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 34,788 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் யென் 46,446 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 26,230 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் யென் 35,020 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2014 யூலை 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 யூலை 01 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

1.3 **நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.4 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட

கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஊ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1. அபிப்பிராயம்**

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 240,000 தொகையான அலுவலக வாடகை கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவால், நிதி நிலைமைக் கூற்றில் புத்துருவாகும் வேலை மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்ட மீதி அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 82,649 தொகையொன்று வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தவேண்டியதாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், செயற்திட்டத்திடமிருந்து பெறவேண்டிய மீதி எதுவும் இருக்கவில்லை.

**3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதிகளின் பயன்பாடு**

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜேஐசீஏ | 35,020 | 26,230 | 1,728 | 899.56 | 1,033.10 | 899.56 | 1,033.10 |
| இலங்கை அரசாங்கம் | 11,426 | 8,558 | 459 | 376.17 | 458.93 | 377.48 | 460.53 |
| | **46,446** | **34,788** | **2,187** | **1,275.73** | **1,492.03** | **1,277.04** | **1,493.63** |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்தால் நிர்மாணிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பாலத்தின் விபரமான வடிவமைப்புக்கள், மின்சார பரிமாற்ற வரிசை மற்றும் ஏனைய கட்டிடங்கள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எனினும், நிர்மாண வேலைகளின் ஆரம்பித்தல் கீழே விபரிக்கப்பட்ட பல்வேறு காரணங்களினால் மெதுவான முன்னேற்றத்தை காட்டியிருந்தது.

(அ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் திட்டங்களின் பிரகாரம், 220 கிலோவோல்ற்ஸ் மற்றும் 132 கிலோவோல்ற்ஸ் மேல்நிலை உயர் மின்னழுத்த பரிமாற்றல் வரிசைகளை தேவையான வீதி அகற்றல் இடைவெளிகளை வழங்கக்கூடிய வகையில் நிலக்கீழ் கேபிள்களுக்கு மாற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அவற்றின் மீது ரூபா 1,240.88 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயமானது வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை மின்சார சபை என்பவற்றால் பகிர்ந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், சொல்லப்பட்ட வேலைகளுக்கான ஒப்பந்தகாரரை தெரிவுசெய்தல் மீதான கேள்விச் செய்முறை 2015 திசெம்பர் 31 வரையிலும் இலங்கை மின்சார சபையால் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 02 உப நிலையங்கள், 06 துணைத் தூண்கள், 02 சிறிய துணைத் தூண்கள், புதிய வீதி இடஒதுக்கீட்டு எல்லையுடன் சேர்த்து நிலக்கீழ் உயர் மின்னழுத்த கேபிளை மீள இடுதல், இரண்டு வரிசைப் பிரிவுகளுக்காக நடுத்தர குறைந்த மின்னழுத்த மேல்நிலைக் கேபிள்களை மாற்றுதல் மற்றும் களனி கங்கைக்கு குறுக்காக நடுத்தர குறைந்த மின்னழுத்த மேல்நிலைக் கேபிள்களை இடம் மாற்றுதல் போன்ற வேலைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆரம்பக் கட்டங்களில் இருந்தன.

(ஆ) கொற்றிகாவத்தையிலுள்ள காணியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பதவியணியினர் இல்லங்களை நிர்மாணித்தல் வேலைகள் குறிப்பிட்ட காணியின் சட்டரீதியான உரிமைத்துவத்தினை மாற்றுவதிலுள்ள சர்ச்சைகள் காரணமாக 2015 திசெம்பர் 31 வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2015 திசெம்பர் 29 இல் மண் புலனாய்வு நோக்கங்களிற்காக ரூபா 190,210 தொகை தனியார் தரப்பினரொருவருக்கு செயற்திட்டத்தால் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2015 மார்ச் 19 இல் ஆரம்பிக்கப்பட்டு 2016 யூலை 15 இல் பூர்த்தியாக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ஹல்பரவவிலுள்ள இலங்கை அணுசக்திச் சபைக்கான கட்டிடங்களின் நிர்மாண வேலைகள் பொதுமக்களின் எதிர்ப்புக் காரணமாக கைவிடப்பட்டிருந்தது. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அறிக்கைகளின் பிரகாரம், புதிய இடத்திற்கு கட்டிடத்தை மாற்றுவதில் சுற்றாடல் விடயங்கள் தொடர்பான பாதகமான விளைவுகள் இருக்கவில்லையென இது உறுதிப்படுத்தியிருந்தது. எவ்வாறாயினும், அப் பகுதியிலுள்ள மக்களை கற்பிப்பதற்கும் பொதுமக்கள் எதிர்ப்புக்களை கட்டுப்படுத்துவதற்கும் மாற்று நடவடிக்கை எடுப்பதற்கும்

நிறைவேற்றல் முகவரினால் போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2015 மார்ச் 09 இல் ரூபா 419.07 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் கட்டிட நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 34.72 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் போது ஒப்பந்தகாரருக்கு விடுவிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

ஒப்பந்த நிபந்தனையின் 14.2 ஆம் பந்தியின் பிரகாரம், அளவீட்டுப் பட்டியலில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாட்டுத் தொகைகள், நாள் வேலைகள் மற்றும் பௌதீகரீதியான மற்றும் விலை நிச்சயமின்மைகள் போன்றவற்றிற்கான ஏற்பாடு என்பவற்றை தவிர்த்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத் தொகை கணிப்பீடு செய்யப்பட வேண்டும். எனினும், ரூபா 157.88 மில்லியன் கூட்டுத்தொகையான ஏற்பாட்டுத் தொகைகள், பௌதீகரீதியான மற்றும் விலை நிச்சயமின்மைகள் உள்ளடங்கிய இலங்கை அணுசக்திச் சபை மற்றும் ஓட்டோமொபைல் பொறியியல் பயிற்சி நிறுவனம் என்பவற்றிற்கான கட்டிட நிர்மாணிப்பிற்கான ஒப்பந்தங்களிற்காக செயற்திட்டத்தால் ரூபா 291.24 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணம் கணிப்பிடப்பட்டு செலுத்தப்பட்டிருந்ததன் விளைவாக ரூபா 24.56 மில்லியன் தொகை வேலை ஆரம்பிப்பு முற்பணங்களாக ஒப்பந்தகாரர்களுக்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தன.

**3.4 மனித வளங்கள் முகாமைத்துவம் தொடர்பான சர்ச்சைகள்**

பிரதான பொறியியலாளர், வேலைத்தள பொறியியலாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், செயற்திட்டக் கணக்காளர், காணி சுவீகரிப்பு உத்தியோகத்தர், உதவிக் காணி சுவீகரிப்பு அலுவலர், கொள்வனவு நிபுணர், அளவையாளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் பதவி உள்ளடங்கலாக செயற்திட்டக் கண்காணிப்புப் பிரிவின் முக்கிய பதவி நிலைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 வருடங்களிற்கும் மேலாக வெற்றிடமாக இருந்ததுடன் இது செயற்திட்ட நடவடிக்கைகளின் சீரான செயற்பாடுகளிற்காக மோசமாக தாக்கம் செலுத்தியுள்ளதென அவதானிக்கப்பட்டது.

**3.5 நிதிக் கட்டுப்பாடுகள் மீதான சர்ச்சைகள்**

756 ஆம் இலக்க நிதிப்பிரமாணத்தினால் வேண்டப்பட்டவாறு மீளாய்வாண்டிற்காக செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் மீதான பொருள் மெய்மையாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.